செ.வெ.எண்: 348/2016 நாள்: 10.06.2016

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு விநியோக திட்டத்தில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட அளவிலான எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள லூயி பிரெய்லி அரங்கில் 23.06.2016 அன்று பிற்பகல் 5.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு முகவர்கள் கலந்து கொள்ள உள்ளதால் எரிவாயு நுகர்வோர்கள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.